



சென்னை – காஞ்சிபுரம் – செங்கல்பட்டு – திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க.வின் இளம் பேச்சாளர்களுக்காக, , சென்னை– அன்பகத்தில் 'சமூக ஊடகப் பயிற்சி அமர்வு' ஒன்றை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தினார்கள். அந்த அமர்வில் தற்போதைய அரசியல் சூழலில், தி.மு.க.வின் பணிகளையும் பொதுச் சேவையையும் எவ்வாறு திறம்பட மேற்கொள்வது என்பது குறித்து விவாதித்தார்கள்.

### அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கட்சித் தாவல்!

# த.வெ.க. அரசு தொடர்ந்து ஏமாற்றுமா?

## முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

சென்னை, ஜூன். 18-

''அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தொடர்ந்து கட்சித் தாவலை மேற்கொண்டு வருவது ஏன்? அவர்களுக்கு த.வெ.க.- அரசு அமைச்சர் பதவி அளிக்குமா? அல்லது ஏமாற்றுமா?'' என்று சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து தங்களது பதவியை ராஜினாமா செய்து விட்டு ஆளுங்கட்சியான த.வெ.க வில் இணைவது தற்போது ஆட்சியில் இருக்கும் த.வெ.க அரசுக்கு ஆதரவு அளித்து வருகின்ற, காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் மீதுள்ள நம்பகத்தன்மையின்மையா? அல்லது அவர்களது தொடர்பை துண்டித்து விட்டு ஒன்றிய அரசிடம் தற்போது வைத்திருக்கின்ற மறைமுக உறவை வெளிப்படையாக உறுதிப்படுத்தப்படுவதற்காகவா?



ஆளுங்கட்சியான த.வெ.க வில் இணைவது தற்போது ஆட்சியில் இருக்கும் த.வெ.க அரசுக்கு ஆதரவு அளித்து வருகின்ற, காங்கி

அ.தி.மு.க.வின் 25 MLAக்கள் இந்த அரசை ஆதரித்து வாக்களிப்பதற்காக அவர்களில் 8 பேர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்று உறுதியளித்ததாக நம்பியவர்களுக்கு கொடுத்த வாக்குறுதி என்ன ஆனது? MLA பதவியை ராஜினாமா செய்து கொண்டு இருப்பது அமைச்சர் பதவிக்காகவா? எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்தவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கலாமே (ஆறு மாதத்திற்குள் தேர்தலில் நின்று MLA வாக தேர்ந்தெடுக்கப்பட்டால் போதுமானதே) தவெக அரசு அதை நிறைவேற்றுமா? அல்லது 25 MLAக்களையும் தொடர்ந்து ஏமாற்றுமா?

இவ்வாறு மு.அப்பாவு அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்- சி.வெ.கணேசன் தலைமை!
### வி.கே.வெங்கடராமன்- நா.பலராமன் வரவேற்புரை!

# பண்ருட்டி வடக்குப்பாளையம் கே.கணேசன் - மலர்விழி இல்ல மண விழா வரவேற்பு!

## செ.புஷ்பராஜ்- கே.ராமச்சந்திரன்- ஆர்.எஸ்.எம்.தணிகை செல்வம்- கே.ராஜேந்திரன் வாழ்த்து!

கடலூர், ஜூன்.18,

கடலூர், பண்ருட்டி, வடக்குப்பாளையம் கிளைக் கழகச் செயலாளர் கே.கணேசன் - மலர்விழி ஆகியோரின் புதல்வர் ஜி.கமல்நாத்- ஏ. சரளா ஆகியோரின் மணவிழா இன்று(18.6.2026- வியாழக்கிழமை) காலை 7.30 மணிக்கு கடகர், திருவந்திபுரம், தேவநாத சுவாமி சன்னதியில் நடைபெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு இன்று(18.6.2026) மாலை6 மணிக்கு மேல் பட்டாம்பாக்கம், மெயின் ரோட்டில் அமைந்துள்ள சோலை சி.எஸ்.எம். திருமண மண்டபத்தில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

மண விழா வரவேற்பிற்கு முன்னாள் அமைச்சர்- கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மேற்கு மாவட்டச் செயலாளர்- முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர். அண்ணா கிராம ஒன்றிய செயலாளர், வி.கே.வெங்கடராமன் , அண்ணாகிரமம் ஒன்றிய கழக முன்னாள் செயலாளர், பொதுக் குழு உறுப்பினர் நா.பலராமன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

மணமக்களை செ.புஷ்பராஜ், கே.ராமு (எ) ராமச்சந்திரன், ஆர்.எஸ்.எம். தணிகைசெல்வம். , கே.ராஜேந்திரன், ஏ.சிவா, பி.குணா (எ) குணசேகரன், வி.திருவேங்கடம், எம்.எஸ்.கணேஷ்குமார், பி. மணிவண்ணன்,பி.வி.ஜெயமூர்த்தி, ஆர்.சுந்தர வடிவேல், ஜெயந்தி ராதா கிருஷ்ணன், எஸ்.துரைராஜ், எம்.ராஜசேகர், சங்கர், இ.மதனகுரு, மா.தா. ஏசுதாஸ், ஜி.கதிர்காமன், ஆர்.டி.ஆர்.பிரபு, நெய்வேலி சதாம், ஏ.ராஜசேகர், பி. புருஷோத்தமன், எஸ். வி.ராமர், எம்.ஆறுமுகம், உமையாள் ஆறுமுகம், ஜி.கே.ஸ்ரீதர், எஸ்.சடாச்சரம், ஏ.கலிலூர்ரஹ்மான், பவை.எழில்செல்வன், டி. ஜெயமூர்த்தி, வி.பி.ராதா கிருஷ்ணன், எஸ்.சதாசிவம், ஆர்.கே.ராகவன், டி. வாசுகி, டி.ஆர்.மனோகர், மகாலட்சுமி வெங்கடேசன், டி. கலியமூர்த்தி, ஜெ. செந்தில்குமார், எம்.முரளி முத்து சாமி, டி.நாராயணன் வாசு.சிவனேசன் D.ஞானவேல் எஸ்.செந்தில்நாதன் பி.கிருஷ்ணராஜ் Dr.ஆர். விஜயசந்திரன் வே.வேணுகோபால், கே.கனகசபை டி.குமரகுரு ஏ.சம்பத் சு.சாமிநாதன் சித்ரா ராஜ்குமார் ஆறு.கண்ணதாசன் ஆர்.எஸ்.அருள், பிச்சை முத்து எம்.ஜி.ஆர்.விக்கி பாலாஜி ஏ.அழகேசன் சோழவல்லி சபா அனீஷ் ராஜா பி.விமல் அஜித், எம். பி.டி.தியாகராஜன், டி.சதாசிவம், எஸ்..கிருஷ்ணமூர்த்தி, ஓ.எம்.பி.சக்கரபாணி, ஏ.பூபதி, என்.பாண்டியன், ஏ.கருணாநிதி, எஸ். பி.ரஞ்சித், R.லட்சுமி காந்தன், டி.அலெக்ஸ் (எ) தினகரன், எஸ்.சுபாஷ், டி.பாலகிருஷ்ணன் உள்பட மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜெ. ரமேஷ், ஏ. செந்தில், எம்.ராஜதுரை, டி. பிரதாப் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.





திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் சார்பில் நடைபெற்ற கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளை காப்பு நிகழ்ச்சியில், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் பரிசுப் பெட்டகங்களை வழங்கி வாழ்த்தினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர் வசந்தவேல், இரா.ஸ்ரீதரன், டாக்டர் குணசிங், அசோக் தியாகராஜன், எஸ். பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், டாக்டர் கவிதா, இல.குணசேகரன், இரா.சேஷாத்திரி, ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாட்டை மோசமான சூழ்நிலைக்குக் கொண்டு செல்லும் த.வெ.க. அரசு!

# குற்றங்களை மூடி மறைக்கும் வழியையே தேடுகின்றனர்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூன் 18-**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று (16.06.2026) செய்தியாளர்களின் கேள்விகளுக்கு, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பதிலளித்தார். அப்போது கூறுகையில், நாட்டில் நடைபெறும் குற்றங்களை மூடி மறைக்கும் அரசாக த.வெ.க. அரசு உள்ளது எனக் குற்றம் சாட்டினார்.**



கனிமொழி கருணாநிதி எம்.பி கூறியதாவது:-

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறுகிறது என்று பொய்யான பிரச்சாரத்தை முன்னிறுத்தியே த.வெ.க. ஆட்சிக்கு வந்துள்ளார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஒவ்வொரு நாளும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. மிக முக்கியமாக, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி, அரசு எந்தக் கவலையும் அக்கறையும் இல்லாத அளவுக்குத் தான் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**எம்.எல்.ஏ.வின் மோசமான செயல்!**

அதைவிட மோசமாக, அந்தக் குற்றத்தை எப்படி மூடி மறைப்பது என்பதற்கான வழிகளைத்தான் இன்று அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று, ஒரு குழந்தையின் பிரேதப் பரிசோதனை (ஆட்டோப்சி) நடைபெறும் இடத்திற்கே ஒரு எம்.எல்.ஏ. உள்ளே சென்று, அந்தக் குழந்தையின் பெற்றோருடன் பேரம் பேசும் அளவுக்கு மிக மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

எங்களுடைய மகளிரணியைச் சேர்ந்த சகோதரி ஒருவர் அந்த நிகழ்வை நேரில் பார்த்திருக்கிறார். எனவே, இப்படிப்பட்ட ஒரு மிக மோசமான சூழலில்தான் தமிழ்நாட்டை கொண்டுபோய் அவர்கள் தள்ளியிருக்கிறார்கள்.

**சிங்கப்பெண் படைக்கு என்ன அதிகாரம்?**

சிங்கப்பெண் அமைக்கப்பட்ட பிறகும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பது ஏன்? என்ற கேள்விக்கு, குற்றச் சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. 'சிங்கப்பெண்' படை என்று பெயர் மாற்றம் செய்து வழங்கியதைப் பற்றி கூட நாங்கள் பெரிதாகப் பேச விரும்பவில்லை. ஆனால், அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவங்களுக்கு தனிப்பட்ட முறையில் ஒரு தொலைபேசி எண் கூடக் கிடையாது.

ஏதேனும் ஒரு குற்றச் சம்பவமோஅல்லதுபிரச்சினையோ ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காக மகளிர் ரோந்து வாகனத்தைத் தொடர்புகொள்வதற்கான வழிவகை கூட இல்லை. இவ்வாறான சூழலில், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இப்படி ஒரு சூழலில், முதலமைச்சர் இதுவரைக்கும் வாய் திறந்து ஒரு வார்த்தை கூட இதைப் பற்றி பேசுவத்திற்கு தயாராக இல்லை.

**மக்கள் மீது அக்கறையற்ற அரசு!**

அப்படியிருக்கும்போது, மக்கள் மீதும், பெண்கள் மீதும், குழந்தைகள் மீதும் இந்த அரசுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பது தெளிவாகிறது. மேலும், முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் காவல்துறையைப் பற்றிக் கூட அவர் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

பாலியல் குற்றங்களில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருப்பதாக என்ற கேள்விக்கு, நிறைய சம்பவங்களில் ஆளுங்கட்சியினரே ஈடுபட்டு இருப்பதாகத் தெளிவாகத் தெரிகிறது. ஒழுக்கம் மற்றும் போதை பொருள் பற்றி பேசுகிறார். ஆட்சியாளர்கள் அவர்களுடைய கடமையிலிருந்து தவறுகிறார்கள். அதுமட்டுமில்லாமல், பல நேரங்களில் பெண்களுடைய உடை தான் அவங்களுக்கு எதிராக குற்றங்கள் நடைபெறுகிறது என்று அவரின் திரைப் படங்களில் பேசிவிட்டு தான் ஆட்சிக்கு வந்துள்ளார். பெண்கள் மீதே இந்தக் குற்றங்களை அவர்கள் திருப்புகிறார்களா என்று தெரியவில்லை.

**குற்றச்செயல்களில் ஆளுங்கட்சியினர்!**

பாலியல் குற்றங்களில் ஆளுங்கட்சியினருக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, "பல சம்பவங்களில் ஆளுங்கட்சியினரே தொடர்புடையவர்களாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது. தனி மனித ஒழுக்கம் மற்றும் போதைப்பொருள் குறித்து அவர்கள் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் தங்களுடைய அடிப்படைக் கடமைகளிலிருந்தே தவறி வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், பெண்களின் உடையால் தான் அவர்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறுகின்றன என்ற கருத்துகளை அவருடைய திரைப்படங்களில் பேசியவர்தான் இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார். எனவே, பெண்கள் மீதே இந்தக் குற்றங்களை அவர்கள் திருப்புகிறார்களா என்று தெரியவில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.

### நாகர்கோவில் மாநகராட்சி

# வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## ஆஸ்டின் எம்.எல்.ஏ. – மேயர் மேரிபிரின்சி லதா பங்கேற்பு!

நாகர்கோவில், ஜூன் 18-

நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் மாநகரப் பகதியில் நடைபெற்றும் வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு நாகர்கோவில் தொகுதி எம்எல்ஏ ஆஸ்டின் தலைமை வகித்தார். மேயர் (பொறுப்பு) மேரிபிரின்சி லதா, மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மண்டல தலைவர்கள் ஜவகர், அகஸ்டினா கோகிலவாணி, உதவி செயற்பொறியாளர் ரகுராமன், மாநகர் அமைப்பு அதிகாரி கெவின் ஜாய், மாநகர் நல அதிகாரி டாக்டர் சரோஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் மாநகர பகுதியில் தற்போது நடந்து வரும் மற்றும் புதிதாகத் தொடங்கப்பட உள்ள அரசு திட்டப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் ஆஸ்டின்எம்எல்ஏகூறியதாவது: நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தற்போது நாகர்கோவில் மாநகராட்சியில் புத்தன்அனை குடிநீர் திட்டப்பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக அம்ருத் திட்டத்தின் வீட்டு இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதனை இரண்டு மாதத்திற்கு முடித்து செயல்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. பாதாளசாக்கடை திட்டப்பணி 2வது பேட்ஜ் அமைக்க திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

விரைவில் அதற்கான அனுமதி பெறப்படும் என அறிவிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. மாநகர பகுதியில் 136 அங்கன் வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்புப் பணிகள் குறித்தும், புதிதாக அங்கன்வாடி மையங்கள் தேவைப்படும் இடங்களைக் கண்டறிந்து அங்கு புதிய மையங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநகராட்சிப் பகுதியில் உள்ள 43 அரசுப் பள்ளிகளில் தேவைப்படும் பள்ளிகள் பராமரிப்பது, கூடுதல் கட்டிடம் அமைக்கவேண்டும். ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறை இல்லாத நடுநிலைப்பள்ளிகளில் ஸ்மார்ட் கிளாஸ் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநகர பகுதியில் 6 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. மேலும் தேவைப்படும் இடங்களில் நகர்ப்புற ஆரம்பசுகாதார நிலையம் அமைக்கப்படவேண்டும். இதற்கான அனுமதியை நான் சட்டமன்றத்தில் பேசி வாங்கி கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். வலம்புரிவிளை குப்பை கிடங்களில் தேங்கி கிடக்கும் குப்பை பயோ மைனிங் முறையில் அகற்றப்பட்டு வருகிறது. மேலும் வேகப்படுத்த கூடதலாக ஒரு இடத்திலும் பயோ மைனிங் முறையை அமல்படுத்தவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. அப்படி புதிதாக வைக்கப்படும் பயோ மைனிங் இயந்திரம் மூலம் தினமும் வரும் குப்பைகளை அகற்ற வேண்டும் எனவும் ஆலோசிக்கப்பட்டது. வடசேரியில் புதிதாகப் பேருந்து நிலையம் அமைப்பதற்காக சுமார் ரூ.63 கோடி மதிப்பில் டெண்டர் விடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் உள்ள சில தொழில்நுட்பக் குறைபாடுகளைக் களைந்து, பணிகளை விரைவாகத் தொடங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநகராட்சிக்கு உட்பட்ட 45 வார்டுகளிலும் பொதுமக்கள் எதிர்பார்க்கும் அனைத்து அடிப்படை வசதிகளையும் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற அதிகாரிகள் குழு முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



கழக தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி.ஜி.செல்வராஜ் இல்லத் திருமண விழாவில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தி.மு.க. பணியாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் வி. ஜெகதீசன், பி. ஜீவரத்தினம், எம்.தீபா, என்.செல்வராஜ், கே. ராஜாமுத்தையா, சி. சீனிவாசன், டி.தவமணி, வி. கண்ணன் மற்றும் கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் டாக்டர் ஆர்.வரதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.